**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 குரோதி வருடம் பங்குனி திங்கள் 09-ம் நாள்**

**S.T.C. No. 49/2025**
(குற்ற எண்.03/2025, தேவகோட்டை தாலுகா காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
தேவகோட்டை தாலுகா காவல்நிலையம்,
குற்ற எண்.03/2025.

….குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.அர்ச்சுணன் (48/2025)
த/பெ. நாராயணன்

…..எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி
வழக்கின்சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>தேவகோட்டைதாலுகா<br>காவல்நிலையம்,<br>குற்ற எண்.03/2025. |
| 2. | எதிரிகள் | 1.அர்ச்சுணன்<br>த/பெ. நாராயணன்<br>**முகவரி:**<br>வளையன்வயல், ஆரக்கோட்டை அஞ்சல், தேவகோட்டை தாலுகா. |

<table>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுகள்</td><td colspan="4">எதிரி மீது பிரிவு 185, 181 MV Act-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>4.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="4">26/01/2025</td></tr>
<tr><td>5.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="4">26/01/2025</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td rowspan="2">எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td colspan="2">26/01/2025</td><td colspan="2" rowspan="2">முன்பிணை பெற்ற நாள்:இல்லை</td></tr>
<tr><td colspan="2">26/01/2025<br>Bailed by Police</td></tr>
<tr><td>7.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="4">30/01/2025</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="4">12/03/2025</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="4">-----</td></tr>
<tr><td rowspan="3">10.</td><td rowspan="3">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td colspan="2">முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td colspan="2">24/11/2025</td><td>24/11/2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td colspan="2">24/11/2025</td><td>24/11/2025</td></tr>
<tr><td>11.</td><td>எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="4">30/12/2025</td></tr>
<tr><td>12.</td><td>எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ------ | ----- |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 12/03/2025 | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 30/12/2025 | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 23/03/2026 | |
| 16. | தீர்வு | **முடிவாக, எதிரி பிரிவுகள் 185, 181 மோட்டார் வாகனச் சட்டம் 1988ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை பி.என்.எஸ்.எஸ் பிரிவு 278(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** | |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.கார்த்தியாயினி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 26/01/2025ம் தேதி 22.30 மணிக்கு தேவகோட்டை கண்ணங்குடி - கரூர் ரோடு வாகன தணிக்கை செய்யும் போது பதிவு எண் பெறாத பதிவு

எண் கொண்ட TVS 1 QUE Eletric வாகனத்தை குடிபோதையிலும் ஓட்டிநர் உரிமம் இல்லாமலும் எதிரி ஓட்டி வந்த குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 185, 181 MV Act-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது பிரிவுகள் 185, 181 MV Act-ன் கீழ் குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை விளக்கி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ1 மற்றும் அ.சா.ஆ2 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 செல்வம் தனது சாட்சியத்தில் தான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக வேலை பார்க்கிறேன் என்றும் கடந்த 26.01.2025-ம் தேதி தானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமச்சந்திரனும் கண்ணன்குடி பொன்னாத்தாள் கோவில் அருகில் இரவு 07.00 மணியளவில் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது

கண்ணன்குடியிலிருந்து கருர் பக்கமாக அர்ச்சுணன் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும் அவர் ஒட்டிவரும் போது தள்ளாடிக் கொண்டு ஓட்டிவந்தார் என்றும் தாங்கள் இருவரும் அவரை மறித்து சோதனை செய்து பார்க்கும் போது அவர் மீது மதுவாடை வீசியது என்றும் பிறகு தேவகோட்டை மருத்துவமனைக்கு கொண்டு வந்து மருத்துவ பரிசோதனைக்கு மருத்துவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தோம் என்றும் ஆனால் எதிரி மருத்துவ பரிசோதனைக்கு உட்பட மறுத்துவிட்டார் என்றும் பின்னர் காவல் நிலையம் கொண்டு வந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றும் தான் உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 ராமச்சந்திரன் தனது சாட்சியத்தில் தான் தற்போது சென்னை மாநகர திருவான்மியூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் இதற்கு முன்பு தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் பணிபுரிந்த போது 26.01.2025-ம் தேதி தானும் தலைமைக்காவலர் செல்வம் கண்ணன்குடி அருகே மாலை 07.00 மணியளவில் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சுமார் 09.30 மணியளவில் கண்ணன்குடியிலிருந்து கருர் நோக்கி சென்றவரை நிறுத்தி சோதனை செய்த போது அவர் தடுமாற்றத்துடன் இருந்தார் என்றும் அவர் ஊதும்போது வாயில் மதுவாடை வந்தது என்றும் அவரை விசாரிக்கும் போது அவருடைய பெயர் அர்ச்சுணன் என்றும் தந்தையின் பெயர் நாராயணன் ஊர் வளையன்வயல் என்றும் சொன்னார் என்றும் வாகனத்திற்கான ஆவணங்களை கேட்ட போது ஆவணங்கள் இல்லை என்று சொன்னார் என்றும் பிறகு எதிரி மீது மதுஅருந்தி வாகனம்

ஓட்டியதற்கும், ஆவணங்கள் இல்லாமல் வாகனம் ஓட்டியதற்கும் வழக்கு தாக்கல் செய்தேன் என்றும் மேற்படி காவல்துறை அறிவிப்பு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்றும் பிறகு எதிரியை தேவகோட்டை அரசு மருத்துவமனை அழைத்து வந்து மருத்துவரிடம் மருத்துவ சான்று பெற்றேன் என்றும் மேற்படி மருத்துவசான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பிறகு எதிரியின் வாகனத்திற்கு ஆவணங்கள் இல்லாததால் வண்டியை வாங்கி வைத்துவிட்டு அவருடைய உறவினருக்கு தகவல் சொல்லி வரவைத்து அவருடன் அனுப்பி வைத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 351(1)(b) இன் கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தனது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) எதிரி கடந்த 26.01.2025-ம் தேதி இரவு 10:30 மணிக்கு தேவகோட்டை கண்ணங்குடி - கரூர் ரோட்டில் வாகன தணிக்கை செய்யும் போது பதிவு

எண் இல்லாத Tvs 1 QUE Electric என்ற வாகனத்தை குடிபோதையில் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் ஓட்டி வந்தார் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும்.

(8.2) இவ்வழக்கில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்ததாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 26.01.2025 தேதி இரவு 7.00 மணி அளவில் வாகன தணிக்கையில் தானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமச்சந்திரனும் ஈடுபட்டிருந்ததாகவும், கண்ணங்குடி பொன்னாத்தாள் கோவில் அருகில் கன்னங்குடியில் இருந்து கரூர் பக்கமாக அர்ஜுனன் என்பவர் இருசக்கர வாகனத்தை தள்ளாடிக் கொண்டு ஓட்டி வந்ததாகவும் அவரை மறித்து சோதனை செய்து பார்க்கும்போது அவர் மீது மது வாடை வீசியதாகவும் பிறகு தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து மருத்துவ பரிசோதனை செய்ய மருத்துவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவும் ஆனால் எதிரி மருத்துவ பரிசோதனைக்கு உட்பட மறுத்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 அவருடைய சாட்சியத்தில் எதிரி ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டியதாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பத்தி 1-ல் வாகன தணிக்கையின்போது Breath Analyzer கருவி அன்று தங்கள் கையில் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(8.3) இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.2 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் 26.01.2025-ம் தேதி தானும் தலைமை

காவலர் செல்வமும் கண்ணங்குடி அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது சுமார் 9.30 மணி அளவில் கண்ணங்குடியில் இருந்து கரூர் நோக்கி சென்றவரை நிறுத்தி சோதனை செய்தபோது அவர் தடுமாற்றத்துடன் இருந்ததாகவும் வாயில் மது வாடை வந்ததாகவும், தனது பெயர் அர்ஜுனன் என்று சொன்னதாகவும், வாகனத்திற்கான ஆவணங்களை கேட்டபோது ஆவணங்கள் இல்லை என்று சொன்னதாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 எதிரி ஆவணங்கள் இல்லாமல் வாகனம் ஓட்டியதாக சாட்சியமளித்துள்ளபோதிலும் அ.சா.2ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக அ.சா.1ன் சாட்சியம் அமையவில்லை.

(8.4) மேலும் அ.சா.1ன் சாட்சியத்தில் இரவு 7.00 மணியளவில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.2டோ சுமார் 9:30 மணியளவில் சம்பவம் நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அரசு தரப்பு வழக்குப்படி சம்பவம் இரவு 10.30 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185-ன் படி இரத்தத்தில் ஒவ்வொரு 100 ml இரத்தத்திற்கும் 30 மில்லி கிராமிற்கும் மேல் மது இருப்பதாக Breath Analyzer கருவியின் பரிசோதனையின் மூலமோ அல்லது வேறு ஏதேனும் சோதனையின் மூலமோ நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வழக்கை பொருத்தவரையில் வாகன தணிக்கையின் போது தங்களிடம் Breath Analyzer கருவி இல்லை என்பதை அ.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் அ.சா.ஆ.2 மருத்துவ சான்றிலும் மது வாடை வீசியதாக குறிப்பிடப்பட்டு மது அருந்தி இருப்பதாகவும் ஆனால் அதன்

பாதிப்பிற்கு உட்படாமல் இருப்பதாகவும் சான்று அளிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.2ல் எதிரியின் இரத்தத்தில் மது இருந்ததா என்பதையும் எந்த அளவிற்கு மது இருந்தது என்பதையும் நிரூபிக்கும் விதமாக எந்த விதமான அறிவியல் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. எனவே மேற்கண்ட காரணங்களையும் சாட்சியங்களில் உள்ள முரண்பாடுகளையும் கருத்தில் கொள்கையில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே சந்தேகத்தின் பலனைப் பெற எதிரி தகுதியுடையவர் ஆகிறார் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9. முடிவாக, எதிரி பிரிவுகள் 185, 181 மோட்டார் வாகனச் சட்டம் 1988ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை பி.என்.எஸ்.எஸ் பிரிவு 278(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.03.23 18:53:08 +0530

**நீதித்துறை நடுவர்**
**தேவகோட்டை.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | செல்வம் (தலைமை காவலர்) | அ.சா.1 | கண்ணுற்ற சாட்சி மற்றும் ரோந்தில் ஈடுபட்டிருந்த காவல் அதிகாரி |
| 2. | ராமச்சந்திரன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) | அ.சா.2 | விசாரணை அதிகாரி |

**Judicial Form No. 68**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No of the exhibit | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | காவல்துறை அறிவிப்பு | 24/11/2025 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | மருத்துவ சான்று | 24/11/2025 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA
Digitally signed by POORNIMA
Date: 2026.03.23 18:53:16 +0530

**நீதித்துறை நடுவர்**
**தேவகோட்டை.**

**பின்குறிப்பு:-**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3. விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.